# அகில இந்திய கட்டுரைப் போட்டி 2010

UN Information Centre
New Delhi

## இளைஞர்களுக்கு ஓர் அழைப்பு

இந்த வருடம் ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு இளைஞர்கள் வருடமாக கருதப்பட்டுள்ளது. அதனை சிறப்பிக்கும் வகையில் ஸ்ரீராம்சந்த்ர மிஷன், இந்தியா மற்றும் பூடானுக்கான ஐக்கிய நாட்டுத் தகவல் மையத்துடன் இணைந்து 2010ம் வருடத்திற்கான அகில இந்தியக் கட்டுரைப் போட்டியை நடத்துகிறது.

இளைஞர்களின் வருடமாகக் கருதப்படும் இந்த வருடத்தில் இளைஞர்களாகிய உங்களை,கொடுக்கப்பட்ட தலைப்புகளில் உங்கள் எண்ணங்களையும், கருத்துக்களையும் வெளிப்படுத்தமுன்வருமாறு அழைக்கிறோம். சுய ஆய்வு மற்றும் சுயமதிப்பீடு செய்வதற்குமான இந்தத்தலைப்புகள் தனித்தன்மை வாய்ந்த ஒரு வாய்ப்பை உங்களுக்கு வழங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## தலைப்புகள்

2010ம் ஆண்டின் அகில இந்திய கட்டுரைப் போட்டிக்கான கரு:

### இளமை: நம்பிக்கைக்கும் முயற்சிக்கும் உகந்த காலம்

### பிரிவு 1 (6-9ம் வகுப்புவரை): நற்குணம் வாழ்க்கையைப் பாதுகாக்கிறது (750வார்த்தகைளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்)

### சிந்திக்க வேண்டிய விஷயங்கள்

P.B.பிட்ஸ்வாட்டர் ஒருமுறை, “ஒருவர் விரும்பித் தேர்ந்தெடுக்கும் விஷயங்களின் முழுமையானகூட்டுத் தொகையே நற்குணமாகும்” என்றார். அப்படியென்றால், சரியான விதத்தில் தேர்ந்தெடுப்பதற்கான நிச்சயமான வழி எது?

இளமைக்காலம் என்பது வாழ்க்கையில் சபலத்தால் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு காலகட்டமாகும். அது தவறு என்பதிலிருந்து சரியானதைச் சொல்லும் ஒருவரின் திறனில் குறுக்கிடுகிறது. சபலத்தின் கடுமையான தாக்குதலில் இருந்து தன்னைப் பாதுகாக்க, இளமைக்காலம் தன்னைச் சுற்றி எழுப்பவேண்டிய சுவரே நற்குணமாகும்.

### பிரிவு 2 (10-12ம் வகுப்பு வரை): சுதந்திரம் என்றால் எதைச் செய்வதற்கும் தரப்பட்ட அனுமதி என்று பொருளல்ல. எது சரியோ, அதைத் தனக்காகத் தேர்ந்தெடுக்கும் விவேகமாகும் அது. (1000 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்)

### சிந்திக்க வேண்டிய விஷயங்கள்

சுதந்திரம் எனும் வார்த்தை பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, நீண்டகாலமாக, தலைமுறைகளுக்கிடையிலுள்ள கடும் போராட்டமாக இருந்து வந்துள்ளது. நீண்ட காலமாகவே இளைஞர்கள் தங்கள் விருப்பப்படி நிபந்தனையற்ற விதத்தில் மாற்றத்தைக் கொண்டுவர வாதாடி வருவதாகத் தோன்றுகிறது. இந்த செயல்பாட்டில் கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின் முக்கியத்துவத்தை பெரும்பாலும் அவர்கள் குறைவாக மதிப்பிடுவதாகத் தோன்றுகிறது.

பொறுப்பை ஏற்றுக் கொள்ளாமல் சுதந்திரத்தை அனுபவிக்கலாம் என்று கருதமுடியுமா? ஒருவர் தனக்குள்ள பொறுப்பு என்கின்ற கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, சுதந்திரம் என்பதற்கான உண்மையான அர்த்தம் அப்போது எதுவாக இருக்கும்?

### பிரிவு 3 (இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டதாரிகள்): பேராவலிலிருந்து (ambition) உயர்ந்த குறிக்கோளுக்கான விழைவும் (aspiration) பொருள் சேகரித்தலிலிருந்து உயர்வான ஒன்றாக ஆவதும் (1000 வார்த்கைளுக்கு மிகாமல்)

### சிந்திக்க வேண்டிய விஷயங்கள்

லௌகீகம் அதிகரித்து வரும் உலகில், புகழ் ஆசையும், பொருள் சேகரித்தலும் ஒரு புதிய குறிக்கோளின் பின்னணியில் உள்ளன. வெற்றிக்கான இன்றியமையாத முன்நிபந்தனையாகக் கருதப்படும் அது, நமது இளைஞர்களின் மனதிலிருந்து உயர்குறிக்கோளுக்கான விழைவு எனும் நல்லொழுக்கத்தை நீண்ட காலமாகவே அழித்துவிட்டது.

எது ஒன்றை அடைவதற்கோ அல்லது எது ஒன்றாக ஆவதற்கோ தேவையான உயர்குறிக்கோளுக்கான விழைவு, சூட்சுமமான மனோசக்தியின் மூலம் அடையக்கூடிய ஒன்றாகும். அது சாதாரண வெற்றிக்கு பதில் முதன்மைநிலையை நாடுவதையே ஆதரித்துப் பேசுகிறது.

பரிணாம வளர்ச்சி அடையவேண்டிய ஆன்மாக்களில் பேராவலையும், உயர்குறிக்கோள்களின் விழைவையும் நேர் எதிரான வெளிப்பாடுகளாகக் காணமுடியுமா? அப்படியென்றால், மனித சாராம்சத்தை உண்மையிலேயே எது வரையறுக்கிறது?

## அங்கீகாரம்

தேசீய, மண்டல, பள்ளி அளவிலான பரிசுகள் அளிக்கப்படும்.

## பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகளும், விதிமுறைகளும்:

போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கல்வி நிறுவனத்தின் அனைத்து மாணவர்களும் 31 ஆகஸ்ட் 2010க்குள் தங்கள் கட்டுரைகளை அப்பள்ளி நிறுவனத்தில் சமர்ப்பித்து விடலாம். ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு பிரிவிற்குமான தரமான முதல் 5 கட்டுரைகளைத் தேர்வு செய்து அவற்றை எஸ்.ஆர்.சி.எம். பிரதிநிதியிடம் 20 செப்டம்பர் 2010 அன்றோ, அதற்கு முன்னரோ போட்டியில் கலந்துகொண்ட அனைத்து நபர்களின் பட்டியலுடன் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

போட்டிக் கட்டுரைகள் யாவும் A-4 அளவுத்தாள்களில் கருப்பு அல்லது நீல மையால் மட்டுமே எழுதப்படவேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளுக்கு மதிப்பெண்கள் தரப்படக்கூடாது. மாணவர்கள் தங்கள் கட்டுரையில் எந்தவிதமான விளக்கப்படங்கள் தருவதையும் தவிர்க்க வேண்டும்

.தலைப்புக்களைப் படித்து ஆய்வு செய்ய மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு, ஊக்குவிக்கப்படுகிறார்கள். சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கட்டுரைகளும் மாணவரின் சுயமான படைப்பாக மட்டுமே இருக்க வேண்டும். அவற்றின் குறிப்புகள் அல்லது மேற்கோள்கள் எதுவாக இருந்தாலும் சரியான அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

www.sahajmarg.org